**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 160/2024**

**Deposition of P.W.** 1

Name : திரு. சுஜின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 21.01.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தக்கலை காவல்நிலையத்தில் தலைமைக்காவலாக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 29.11.2023ம் தேதி இரவு நானும், தலைமைக்காவலர் திரு. ஸ்டாலின் என்பவரும் ரோந்து பணியில் இருந்தோம். தக்கலை காவல்நிலைய பொறுப்பு அலுவலராக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. தினகராஜ் இருந்தார். இரவு 10.20 மணிக்கு அவசர அழைப்பு எண்ணான 100லிருந்து அழைப்பு வந்தது. அதை பொறுப்பு அலுவலர் எங்களுக்கு தகவல் சொன்னார். சம்பவ இடமான சரல்விளையை சார்ந்த சாந்தி என்பவரின் வீட்டிற்கு போனோம். அங்கிருந்த சாந்தியிடம் என்ன விஷயம் என்று கேட்டோம். அப்போது அவர் எதிரி சஜுவன்ராஜ் வீட்டிலிருந்து ஷோபா ஷெட், டைனிங்செயர், டைனிங் டேபிள் ஆகியவற்றை எரித்து விட்டதாக சொன்னார்.

சஜுவன்ராஜை எங்கே என்று கேட்ட போது பக்கத்து வீட்டில்மறைந்து இருந்த எதிரி திடீரென வந்து தேவிடியா பயலே இங்கு எதற்கு வந்தாய் சட்டையை கழற்றி விட்டு வா என்று கெட்ட வார்த்தை போட்டு பேசினார். என்னுடன் வந்த தலைமைக்காவலர் திரு. ஸ்டாலின் நிலைய பொறுப்பு அலுவலருக்கு தொலைபேசி மூலும் தகவல் சொன்னார். நான் அங்கு நடந்த சம்பவத்தை எனது செல்போனில் வீடியோ எடுத்தேன். எதிரி எனது கையிலிருந்த போனை தட்டி விட்டு அவர்மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது கழுத்தை நோக்கி வெட்ட வந்தார். நான் எனது இடதுகையால் தடுத்ததில் எனது இடது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது. மீண்டும் என்னை குத்த வந்தார். வலது கையால் தடுத்ததில் வலது கையிலும் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த தலைமைக்காவலர் திரு. ஸ்டாலினும் அதே ஊரைச்சேர்ந்த சோபிதராஜ் மற்றும் ரதீஷ் ஆகியவர்கள் சண்டையை விலக்கி விட்டார்கள். எதிரி சம்பவ இடத்திலிருந்து ஓடி விட்டார். தக்கலை அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றுவிட்டு தக்கலை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1 காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அவசர எண்ணான 100-க்கு அழைத்தால் முதலில் காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். பின்னர் சம்மந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தகவல் தெரிவிக்கப்படும்

என்றால் சரிதான். அந்த தகவலை பெறும் அலுவலர் தனது பெயர், பதவி ஆகியவை காவல்நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் குறிக்கப்படும் என்றால் சரிதான். ரோந்து காவலர்களுக்கு காவல்நிலையத்திலிருந்து தகவல் வழங்கப்படும் என்றால் சரிதான். எனது புகார் மனுவில் எந்த இடத்தில் ரோந்து சென்ற போது 100 அழைப்பு தொடர்பாக தகவல் கிடைத்தது என்று சொல்லவில்லை. எனக்கு தகவல் சொல்லப்பட்ட விபரம் காவல்நிலையத்தில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். எந்தெந்த காவல் அலுவலகத்தில் என்னென்ன பணி என்பது காவல்நிலையத்தில் பதிவேடாக பராமரிக்கப்படும் என்றால் சரிதான். எனக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று விசாரித்து விட்டு ஆய்வாளருக்கு தகவல் சொன்னேன். சம்பவ நாளில் என்ன நடந்தது என்று காவல் ஆய்வாளருக்கு தகவல் சொன்னேன் என்றால் சொல்லவில்லை. நான் சொன்னது போல் எதிரியின் வீட்டில் எவ்வித சம்பவமும் நடக்காததால் ஆய்வாளருக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 30.11.2023ம் தேதி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். 29.11.2023ம் தேதி காயத்துடன் தான் ரோந்து முடித்து போனேன். எனக்கு ஏற்பட்ட காயம் பற்றி நிலைய பொறுப்பு அதிகாரிக்கு சொன்னேன். காவல் ஆய்வாளருக்கு தகவல் சொல்லவில்லை. எனக்கு காயம் ஏற்படாததால் தகவல் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அடி தடி மற்றும் விபத்து தொடர்பாக மருத்துவமனை சென்றால் அது குறித்த தகவல் காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். தகவலை பெற்று பராமரிக்கும் பதிவேட்டில் பதிவு செய்து

வைத்துள்ளோம் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை 01.12.2023ம் தேதி விசாரித்தார் என்றால் அது பற்றி ஞாபகமில்லை. புகாரில் சம்பவம் 11.00 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் சஜுவன் வீட்டு முன்பு நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நான் மருத்துவமனை செல்லும் போது சுயநினைவுடன் தான் இருந்தேன். மருத்துவரிடம் சம்பவம் புலிப்பனம் சர்ச் அருகே 11.45 மணிக்கு நடந்ததாக கூறினேன் என்றால் சரியல்ல. அவர் தவறுதலாக கூட எழுதி இருக்கலாம். சம்பவத்திற்கு மறுநாள் பணிக்கு போனேனா என்று ஞாபகமில்லை. பணிக்கு போன விபரத்தை சொன்னால் தற்போது வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. குற்ற சம்பவம் குறித்து உடனடியாக தகவல் கொடுத்து காலதாமதமில்லாமல் நடவடிக்கை எடுக்க புகார் கொடுக்கப்படும் என்றால் சரிதான். சம்பவம் நாளிலோ, அதற்கு மறுநாளோ நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்னது போல் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வெட்டுக்காயத்திற்கும், சிராய்ப்பு காயத்திற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். புகார் 01.12.2023ம் தேதி என்றால் அதை திருத்தியுள்ளார்கள். 01.12.2023ல் புகார் கொடுத்து அதன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி மீது குண்டர் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டி பொய் வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரில் எனது செல்போன் எண்ணோ, நிறமோ குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். சேதமதிப்பு பற்றியும் கூறவில்லை என்றால் சரிதான். உடைந்த செல்போனை நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாக வாக்குமூலம் கொடுக்கவில்லை. ஆனால்

முன்னரே செல்போனை வாங்கிவிட்டார்கள். புகாரில் உள்ள திருத்தம் காவல்நிலையத்தில் வைத்து செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. உடைந்த செல்போண் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். காவல்துறை சீருடையில் இருந்த என்னை எதிரி கொலை செய்ய வந்தார் என்பது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. எதிரி குற்ற பின்னணி கொண்ட பதிவேடு எங்கள் காவல்நிலையத்தில் பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். எதிரியை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க பொய்யாக புகார் கொடுத்து வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் அருகே 2, 3 வீடுகள் உள்ளது. அவர்களும் சம்பவத்தை பார்த்தார்கள். ஊர் மக்கள் பார்த்ததாக புகாரில் குறிப்பிடவில்லை. புகாரில் சொல்லாத விஷயத்தை மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடக்காததால் எதிரிமீது புகார் கொடுக்க 2 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகள் போலீசாரால் உருவாக்கப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல.

**CASE NO.SC. 160/2024**

**Deposition of P.W.** 2

Name : திரு.ஸ்டாலின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:21.01.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தற்போது அஞ்சுகிராமம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன்.அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். 29.11.2023ம் தேதி தக்கலை காவல்நிலையத்தில் தலைமைக்காவராக பணியாற்றிய போது 29.11.2023ம் தேதி இரவு நானும், கிரேடு –1 2015 திரு. சுஜின் என்பவரும் ரோந்து பணியாக சென்றிருந்தோம். ரோந்து பணியை தினகராஜ் என்பவர் கண்காணித்து வந்தார். அவசர எண்ணான 100–லிருந்து தக்கலை காவல்நிலையத்திற்கு கிடைத்த தகவலை அவர் எங்களுக்கு சொன்னார். நாங்கள் சம்பவ இடமாக சாந்தியின் வீட்டிற்கு போனோம். பார்க்கும் போது ஷோபா, செயர், ஆகியவற்றை எரித்து கொண்டிருந்தார்கள். சஜுவன்ராஜ் எரித்ததாக



அவரது தாயார் கூறினார். அவரை எங்கே என்று கேட்ட போது வெளியே சென்றிருப்பதாக சொன்னார்கள். என் வீட்டிற்கு உங்களை யார்

வரசொன்னார்கள் என்று அசீங்கமாக பேசினார். சட்டையை மாற்றி விட்டு வாருங்கள் என்று எங்களிடம் சொன்னார். சார்பு ஆய்வாளரிடமும் அசீங்கமாக பேசியதால் தினகராஜ் அவர்களுக்கு தகவல் சொன்னோம். நான் போனில் இரவு பணி குறித்து பேசி கொண்டிருந்த போது என்னுடன் வந்த காவலரான திரு. சுஜின் எதிரியை வீடியோ படம் பிடித்தார். திரும்பி பார்ப்பதற்குள் கத்தியை எடுத்து கத்தி எடுத்து வெட்டியுள்ளார். சுஜினின் வலது கையில் காயம் ஏற்பட்டது. மீண்டும் கத்தியை எடுத்து குத்த சென்ற போது அருகில் இருந்த நபர்கள் சத்தம் போட்டார்கள். எதிரி அங்கிருந்து ஓடி விட்டார். அ.சா.1 தக்கலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனார். பின்னர் நிலையம் வந்து புகார் கொடுத்தார். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எதிரியின் வீட்டில் நடைபெற்ற சம்பவத்திற்கு அவரது தாயார் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை. நான் சொன்னது போல் எதிரி தீ வைத்து எரிக்காததால் புகார் எதுவும் வரவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஓடிய பிறகு எரிந்து கிடந்த பொருட்களை போட்டோ பிடித்தோம். நான் எவ்வித புகைப்படமும் எடுக்கவில்லை என்றும், மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் 29.11.2023ம் தேதி நடைபெற்றது. அன்றே தினமே அ.சா.1 ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். ஆய்வாளா என்னையும் என்னுடன் வந்த அ.சா.1 மற்றும் தினகராஜ் என்பவரிடமும் சம்பவம் நடந்த அன்றைய தினமே வாக்குமூலம் பெற்றார்



என்றால் சரிதான். அ.சா.1 ஆய்வாளரிடம் சம்பவத்தன்றே செல்போனை ஒப்படைத்து விட்டார். நான் சத்தம் கேட்டு குத்தும் போது நேரடியாக பார்த்தேன். அ.சா.1 என்னுடன் வேலை பார்ப்பவர் என்பதால் நடக்காத

சம்பவத்திற்காக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொருட்களை எரித்த அன்றே வீட்டில் தகராறு நடப்பதாக உயரதிகாரிகளுக்கு தகவல் சொன்னேன். காவல்துறை ஆய்வாளருக்கும் தகவலை சொன்னோம். அ.சா.1 காயத்துடன் இருப்பதை ஆய்வாளர் பார்த்தார். எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சொன்னது போல் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க பெறப்பட்ட பொய்யான புகாரில் சாட்சியாக சேர்க்கப்பட்டு அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.